# JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
## DEPOSITION OF WITNESS

CC.No. 105/2021 Date: 10.06.2024 P.W.1

பெயர் : திரு. பூமணி
தந்தை /கணவர் பெயர் : செல்லகண்

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 10th day of June 2024

2வது எதிரி ஆஜரில் உள்ளார். 1, 3,4 எதிரிகள் ஆஜரில் இல்லை. ச/பி 317 கு.வி.மு.ச மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

1. நான் தற்சமயம் தேவசபையில் ஊழியம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். என் மகள் மெர்லினின் நிச்சியதார்த்ததின் போது நகை போடப்பட்டு போட்டோ மற்றும் வீடியோ எடுக்கப்பட்டதா என்றால் வீடியோ எடுக்கப்படவில்லை. நிச்சியதார்த்திற்கு பொதுவாக சபையில் வைத்து அன்பளிப்புகள் கொடுப்பார்கள் என்றால் சரியல்ல. நிச்சியதார்த்தம் முடிந்த பின்னர் வீட்டில் வைத்து தான் கொடுப்பார்கள். திருமணத்தின் போது ரூ.2,00,000 நிச்சியதார்த்திற்கு முன்பாகவும் நிச்சியதார்த்தில் ரூ.6,00,000 வரதட்சனையாக எதிரிகள் என்னிடமிருந்து பெற்றதற்கு நான் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் அப்பொழுது எந்த பிரச்சினையும் இல்லை, அதனால் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் காவல்துறையிலிருந்து விருப்ப ஓய்வு பெற்ற பின்னர் தான் இரண்டு மகள்களுக்கும் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் என்ன விருந்து பரிமாறப்பட்டது என்றால் மொத்ததில் ரூ.50,000 செலவு செய்து விருந்து வைத்தார்கள். திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் முக்கிய பிரமுகர்கள் யார் யார் கலந்து கொண்டார்கள் என்றால் அது தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

2. திருமண வரவேற்பு நிகழச்சியில் கரிகோள் ராஜா அண்ணாச்சி, மற்றும் காளிதாஸ் மற்றும் பலர் கலந்துகொண்டார்கள் என்றாலும் அசைவ உணவு விருந்து பரிமாறப்பட்டது என்றால் சரிதான், அது சாதாரணமான அசைவ உணவு வகையாகும். திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நான் குறிப்பிட்ட நபர்களை தவிர வேறு யாரையும் திருமண வரவேற்பிற்கு அழைக்கக்கூடாது என்று கட்டுபாட்டின் பேரில் தான் திருமண வரவேற்பு நடைபெற்றது என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து எத்தனை நாட்கள் கழித்து சிம்லாவிற்கு அவருடன் கணவருடன் அணிமூனுக்கு சென்றார்கள் என்றால் திருமணம் வரவேற்பு நிகழ்ச்சி முடிந்து இரண்டு நாட்கள் கழித்து சென்றார்கள். வழி அனுப்புவதற்காக நான் எந்த வாகனத்தில் எங்கு சென்று வழியனுப்பிவிட்டு வந்தேன் என்றால் என்னுடைய உறவினர் ஒருவரின் வாகனத்தில் சென்றியிருந்தேன். கன்னியாகுமரி வட்டக்கோட்டையிலிருந்து திருவனந்தபுரம் சென்று வழியனுப்பி வைத்தேன். எதிரிகளுக்கு சொந்தமாக இரண்டு கார்கள் உள்ளது என்றாலும் சொந்தமாக டிராவல்ஸ் வைத்து நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். 3, 4 எதிரிகளிடம் கார் இருந்தது, 1வது எதிரியிடம் கார் இல்லை.

3. திருமணம் நடைபெற்று குறுகிய காலத்தில் தேன்நிலவிற்கு சென்றதால் என் மகள் என்னிடம் தான் நகைகள் அனைத்தையும் கொடுத்துவிட்டு தேன்நிலவிற்கு சென்றார் என்றால் சரியல்ல, 2வது எதிரியிடம் எல்லா நகைகளையும் கொடுத்துவிட்டு சென்றார். அணிமூன் முடிந்து என்னுடைய மகளும் 1ம் எதிரியும் வந்தபோது 2ம் எதிரி எங்கு இருந்தார் என்றால் 2வது எதிரி கொடுங்கையூர் வீட்டில் இருந்தார். 1ம் எதிரியும் அசா.1ம் தேன்நிலவிற்கு சென்று திரும்பி வந்தபோது 2ம் எதிரி வட்டக்கோட்டையில் தான் இருந்தார் என்றாலும் ஒரு வாரம் கழித்து தான் திருமணம் சம்மந்தமான

கணக்கு வழக்குகளை முடித்துவிட்டு வந்தார் என்றால் சரியல்ல. 2ம் எதிரியும் திருமண நிகழ்ச்சிகள் முடிந்தவுடன் சென்னைக்கு வந்துவிட்டார். 1ம் எதிரியும் அசா.1ம் திருமணம் முடிந்தவுடன் விருந்து நிகழ்ச்சிகள் முடிந்து கொடுங்கையூர் வீட்டில் தனிக்குடித்தனம் சென்றார்கள் என்றால் சரியல்ல. கொடுங்கையூர் வீட்டில் அசா.1 மற்றும் அனைத்து எதிரிகளும் கூட்டுகுடும்பமாக வாழ்ந்தார்கள். எல்லா நகைகளும் அவர்களிடம் தான் இருந்தது. அசா.1 அணிமூன் சென்று வரும் வரையில் அனைத்து நகைகளும் அவர் தான் வைத்திருந்தார் என்றால் சரியல்ல.

4. விருந்து நிகழ்ச்சிகளுக்கு 2ம் எதிரியும் 1ம் எதிரி மற்றும் அசா.1யுடன் சென்று வந்தார் என்றால் சரியல்ல. சிம்லா சென்றபோது அசா.1 தங்க தாலி செயினை அணிந்துக்கொண்டு தான் சென்றார் என்றாலும் நான் உண்மை மறைத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2வது எதிரியிடம் நகையை கொடுத்துவிட்டு 3 சவரன் சின்ன செயினை போட்டுச்சென்றார். சேனம்விளை என்ற கிராமத்திற்கு மணமக்களுடன் நானும் எதிரிகளும் சென்றியிருந்தோம் 4 மாதம் கழித்து நான் மட்டும் சென்றியிருந்தேன். திருமணம் நடைபெற்ற நாளிலிருந்து ஆஜர் எதிரி விருகம்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டில் வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல, இரண்டு வீட்டிலும் மாறி மாறி ஒன்றாக வாழ்ந்து வந்தார். என்னுடைய பேத்தி பிறந்தபோது யார் பார்க்க வந்தார்கள் என்றால் 1வது எதிரி மட்டும் வந்தார். வேறு யாரும் வரவில்லை. குழந்தை பிறந்தபோது 2, 3, 4 எதிரிகள் மற்றும் அவர்களது உறவினர்கள் மருத்துவமனைக்கு வந்து மகிழ்ச்சியுடன் பார்த்து சென்றார்கள் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி தரப்பில் என்னுடைய பேத்திக்கு என்னென்ன நகைகள் போடப்பட்டது என்றால் எந்த நகையும் போடப்படவில்லை.

5. ஆஜர் எதிரி தரப்பில் 3ம் எதிரி டைசன் அரை பவுன் வளையல், 1வது எதிரி தரப்பில் 1 1/2 சவரன் தங்க சங்கலி போடப்பட்டது. 2வது எதிரி நாத்தனார் ராணி என்பவர் 2 கிராம் தங்க வளையல், 4வது எதிரியின் தம்பி ராஜன் 2 கிராம் தங்க வளையல் போட்டார்கள் என்றால் சரியல்ல. பெண் குழந்தை பிறந்ததால் எதிரிகள் துக்கப்பட்டு சென்றதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் பேத்தி பிறந்தபோது என் மகளையும் பேத்தியையும் வந்து பார்த்துவிட்டு சென்றதாக அசா.1 அவர் கொடுத்த புகாரில் கூறியுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. ஜெ ஜெ நகர் கிழக்கு முகப்பேர் ராஜ் மருத்துவமனையில் அசா.1ற்கு பெண் குழந்தை பிறந்தபோது அவரது மாமியார், மாமனார் வந்து பார்த்துவிட்டு பெண் குழந்தை என்று துக்கப்பட்டு சென்றதாக அசா.1 அவரது புகாரில் குறிப்பிட்டு கூறியுள்ளார் என்றால் மருத்துவமனையில் 4 நாட்கள் இருந்தார்கள் எதிரிகள் எப்பொழுது வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் பெண் குழந்தை என்று துக்கப்பட்டு சென்றதாக நான் கூறுவது பொய் என்றாலும் பெண் குழந்தைக்கு அனைத்து சீர்வரிசைகளும் செய்தார்கள் என்றால் சரியல்ல.

(கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

மறு விசாரணை - இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/- V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate Court,
Ambattur